03.02.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 107 /2018

அ.சா.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனசேகரன் | | |
| த/பெ | சுப்பிரமணியன் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 54 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 ம் கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ. 3 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ம் கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ. 4 ஆகும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு கண்டம்பாக்கம் கிராமத்தில் போலீசார் என்னிடம் தாங்கள் அங்கு வந்து சென்றதை உறுதிப்படுத்த கையெழுத்து செய்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் எழுதாத பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 29/08/2014 ந் தேதி காலை 6. 30 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த நடராஜன் என்பவரும், இவ்வழக்கில் கொலையுண்ட முருகன் என்பவரின் வீட்டின் அருகில் நின்று கொண்டிருந்த போது விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து எங்களை விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அப்போது சம்பவ இடத்தில் இருந்த இரத்தம்தோய்ந்த சாம்பல் நிற போர்வை ஒன்றையும், உறைந்த ரத்தம் சிறிதளவையும் , சாதாரண மண்ணையும் , ரத்தம் தோய்ந்த மண்ணையும் சம்பவ இடத்தில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகசர் , கைப்பற்றுதல் மகசரில் நானும், நடராஜன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**